**(சார்பு நீதிமன்றம்), பரமத்தி**

**ஓ.எஸ்.எண். 113/2022** **நாள். 06.04.2026**

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06–ம் நாள் வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமரவேல் | தொழில் | விவசாயம் |
| த. பெ./க.பெ. | குழந்தைசாமி | சாதி | |
| கிராமம் | மேல்குட்டை தோட்டம் | மதம் | இந்து |
| வட்டம் | பரமத்தி வேலூர் | வயது | 49 |
| மாவட்டம் | நாமக்கல் | | |

**வா.சா.2**
**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 2–ம் சாட்சி ஆவேன். நான் **வா.சா.2 ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு, கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள் – இல்லை.**

**2 முதல் 4ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் விவசாயம் மற்றும் லாரி வைத்து தொழில் செய்து வருகிறேன். 6, 7 வருடங்களுக்கு முன்பு வாதியின் தம்பியிடம் லாரி தொழில் சம்மந்தமான கணக்கு வழக்குகளை பார்த்து வந்தேன். வாதியும், அவரின் தம்பியும் எப்போது பங்கு பிரித்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இவ்வழக்கிற்கு சாட்சியம் அளிக்க செல்வராஜ்

அழைத்தார். எனது வீட்டிற்கும், செல்வராஜ் வீட்டிற்கும் சுமார் ½ கி.மீ. இருக்கும். நானும், செல்வராஜும் பாட்னர்கள் என்றால் சரியல்ல. நானும், செல்வராஜும் சேர்ந்து லாரி தொழில் செய்து வருகிறோம்ள ன்றாலும், வழக்கிற்காக வாதியின் தம்பியுடன் லாரி தொழில் செய்து வருவதாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் கடனுறுதி சீட்டு செல்வராஜ் வீட்டில் முன் போர்டிக்கோவில் வைத்து எழுதப்பட்டது.

2) நான் 11 மணிக்கு மேல் செல்வராஜ் வீட்டிற்கு சென்றேன். செல்வராஜ் வீட்டிற்கு நான் கடைசியாக சென்றேன். செல்வராஜ் வீட்டில் செல்வராஜ், சீனிவாசன், சுகுமார் மற்றும் பழனியப்பன் ஆகிய நான்கு பேர் இருந்தார்கள். தாவா புரோநோட்டு 11.30 மணிக்கு மேல் எழுத ஆரம்பித்தார்கள். தாவா புரோநோட்டு எவ்வளவு நேரம் எழுதப்பட்டது என்றால் முக்கால் மணி நேரம் இருக்கும். தாவா புரோநோட்டு யார் எழுதினார் என்றால் சுகுமார் எழுதினார். தாவா புரோநோட்டு என்ன காரணத்திற்காக எழுதப்பட்டது என்றால், சீனிவாசன் பணம் கேட்டார் அதற்காக எழுதப்பட்டது. எவ்வளவு பணம் என்றால் ரூ.9,00,000/– ஆகும்.

3) மேற்படி கடன் பணமாக கொடுக்கப்பட்டது. ரூ.500/– நோட்டுகளாக பணம் கொடுக்கப்பட்டது. 2021–2022ம் ஆண்டு கொரோனா காலகட்டம் என்றால் சரியல்ல. சொன்ன தேதியில், சீனிவாசன் செல்வராஜூடம் கடன் கேட்டு வரவில்லை என்றாலும், சொன்ன தேதியிலும், சொன்ன இடத்திலும் தாவா புரோநோட்டு எழுதப்படவில்லை என்றாலும் சரியல்ல. சீனிவாசன் இறந்ததற்கு பின்னிட்டு நானும், செல்வராஜ் மற்றும் சாட்சி கையொப்பமிட்டவர்கள் சேர்ந்து தாவா புரோநோட்டை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சீனிவாசன் ஏலச்சீட்டு நடத்துவதற்காக கொடுத்து

இருந்த கடனுறுதி சீட்டை நானும், செல்ரவாஜும் மற்றும் சாட்சி கையெழுத்து போட்டவர்களும் சேர்ந்து தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.செல்வராஜ் கேட்டு கொண்டதின் பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சீனிவாசன் செல்லவராஜூடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.04.06 17:49:41 +0530

Sub Judge,
Paramathy